முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 12

கால அளவு: 1.30 மணிநேரம் கணக்குப்பதிவியல் மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10×1=10

1) கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.30000 பெற்ற ரொக்கம் ரூ.100000 கடன்விற்பனை ரூ.90000 கடனாளிகள் இறுதிஇருப்பு ..............
அ) 30000 ஆ) 130000 இ) 40000 ஈ) 20000

2) பொறுப்புகளை காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்

3) கடன் விற்பனை தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
அ) மொத்த கடனாளி க/கு ஆ) மொத்த கடனீந்தோர் க/கு
இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ஈ) செலுத்தற்குரிய மாற்று சீட்டு க/கு

4) வருவாய் செலவின கணக்கு ஒரு ............
அ) பெயரளவு க/கு ஆ) சொத்து க/கு
இ) ஆள்சார் க/கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு

5) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு
இ) முதலின செலவு ஈ) வருவாயின செலவு

6) உயில் கொடை ஒரு
அ) வருவாயின செலவு ஆ) முதலின செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

7) நடப்புயாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது
அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு இ) ஒரு செலவு ஈ) ஒரு வரவு

8) பின்வருவனவற்றுள் எது இலாப நட்ட பகிர்வு கணக்கில் காட்டப்படும்
அ) அலுவலக செலவு ஆ) பணியாளர் ஊதியம்
இ) கூட்டாளி ஊதியம் ஈ) வங்கிகடன் மீதான வட்டி

9) கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெற தகுதியுடையது
அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

10) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
அ) கூட்டாளிகள் இலாபநட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும்
ஆ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்
இ) கூட்டாளிகளுக்கு சம்பளம், அல்லது ஊதியம் அனுமதிக்கப்படமாட்டாது
ஈ) கூட்டாளிகளிடம் பெற்ற கடனுக்கு 6% வட்டி அனுமதிக்க வேண்டும்.

பகுதி - ஆ

II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 17 கட்டாயம்) 5×2=10

11) நிலை அறிக்கை என்றால் என்ன?

12) முழுமை பெறா பதிவேடு என்றால் என்ன?

13) முதலின வரவுக்கு நான்கு எடுத்துக்காட்டு தருக.

14) உயில் கொடை என்றால் என்ன?

15) நிலை முதல் முறை என்றால் என்ன?

16) பின்வரும் விவரங்களில் இருந்து விடுபட்ட தகவலை காண்க.
இறுதிமுதல் 80000, கூடுதல் முதல் 30000, எடுப்பு 15000, நட்டம் - 25000, தொடக்க முதல் ரூ. - ?

17) 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ரூ.20000, எடுப்பு மீதான வட்டி ஆண்டுக்கு 10% கணக்கிடப்படுகிறது 2018 டிச 31 அன்று எடுப்பு மீது வட்டு கணக்கிடவும்.

பகுதி - இ

III. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 24 கட்டாயம்) 5×3=15

18) முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?

19) வருவாய் செலவின க/கு என்றால் என்ன?

20) பின்வரும் விவரங்களில் இருந்து கடன் விற்பனையை கணக்கிடுக.
2018 ஏப் 1 அன்று கடனாளிகள் - 100000
கடனாளியிடம் பெற்ற ரொக்கம் - 230000
அளித்த தள்ளுபடி ரூ.5000
உள்திருப்பம் - 25000
2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் - 120000

21) பின்வரும் விபரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் என காட்டுக.
பந்து மட்டை தொடக்க இருப்பு - 3000
வாங்கியது - 17000
பந்து மட்டை விற்றது ரூ.2000
பந்து மட்டை இறுதி இருப்பு ரூ.4000

22) பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் என காட்டுக.
சங்கத்தில் 100 உறுப்பினர் உள்ளனர். ஒவ்வொருவரும் ரூ.25 ஆண்டு சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டு இறுதியில் 10 உறுப்பினர் சந்தா செலுத்தாமல் உள்ளனர் ஆனால் 4 உறுப்பினர் சந்தா அடுத்த ஆண்டு குறியது முன்கூட்டி செலுத்தப்பட்டது.

23) 2018 ஜனவரி, 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகள் முதல் கணக்குகள் முறையே 50000 மற்றும் 40000 இருப்பினை காட்டியது. 2018 அக் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ரூ.10000 கொண்டு வந்தார். 2018 மே 1 அன்று பாத்திமா கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ.9000, டிசம்பர் 31 2018 ஆம் நாளோடு முடிவுறும் ஆண்டு குறிய முதல் வட்டி மீது வட்டி 4% கணக்கிடுக.

25) கூட்டாண்மையின் சிறப்பியல்புகள் தருக.

பகுதி - ச

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3×5=15**

25) அ) 2017 ஏப்ரல் 1 அன்று கணேஷ் ரூ.75000 முதலுடன் தன்னுடைய தொழிலை தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகள் பின்வருமாறு

| விவரம் | | விவரம் | |
|---|---|---|---|
| ரொக்கம் | 5000 | கடனாளிகள் | 16000 |
| சரக்கிருப்பு | 18000 | கடனீந்தோர் | 9000 |
| பெறுதற்குரிய மாற்று சீட்டு | 7000 | வங்கி ரொக்கம் | 24000 |
| அறைகலன் | 3000 | செலுத்தற்குரிய மாற்றி சீட்டு | 6000 |
| நிலம் கட்டிடம் | 30000 | | |

அவ்வாண்டில் சொந்த பயனுக்காக ரூ.15000 எடுத்துக்கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.20000 இலாபம் (அ) நட்டம் கண்டறியவும்.

(அல்லது)

ஆ) பெறுதல் செலுத்தல் க/கு வருவாய் செலவின க/கு வேறுபாடு தருக.

26) அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018 டிச 31 ஆம் நாளோடு முடியும் ஆண்டுகான பெறுதல் செலுத்தல் கணக்கை தயார் செய்க.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு -1.1.18 | 2000 | தீக்காப்பீடு செலுத்தியது | 1500 |
| வங்கி இருப்பு -1.1.18 | 3000 | சந்தா பெற்றது | 8500 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6000 |
| எழுதுபொருள் வாங்கியது | 6000 | செய்தித்தாள் வாங்கியது | 700 |
| தணிக்கை கட்டணம் | 2000 | அறைகலன் மீது தேய்மானம் | 900 |
| நுழைவு கட்டணம் பெற்றது | 3000 | போக்குவரத்து செலவு | 1000 |
| பல்வகை செலவுகள் | 6000 | அறைகலன் விற்றது | 4000 |
| உதவி தொகை அளித்தது | 2000 | ரொக்க இருப்பு 31.12.2018 | 2500 |
| முதலீடு மீதான வட்டி | 2000 | | |

(அல்லது)

ஆ) நிலை அறிக்கை இருப்பு நிலை குறிப்பு வேறுபாடு தருக.

27) அ) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே 60000 மற்றும் ரூ.40000 அவர்கள் இலாப பகிர்வு விகிதம் 2% அவர்கள் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ரூ.5000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டி கணக்கிடவும்.

i) முதல் மீது வட்டி குறித்து ஒப்பாவணத்தில் குறிப்பிடாத போது
ii) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% அவமதிக்கும் போது
iii) ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கப்படும் போது

(அல்லது)

ஆ) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்ன?

- - - - - - -